# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 ஆவணி மாதம் 06ம் திகதி முதல் 12ம் திகதி வரை

***''இறைவார்த்தை, இறைவிருப்பத்தை தேடுவதற்கு ''என் பின்னே வா'' என்று இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் அழைப்புவிடுக்கிறார்.''***

01. புகழ்ச்சிக்கான அறிமுகம்

- புபுது பாடல் இல 01 ''தந்தை மகன் தூயஆவி..........''
- இவ் வருடத்தின் எமது வருடாந்த தலைப்பு ''உமது வார்த்தையும் விருப்பமும் அக்கினியாகும் ஆசீர்வாதமாகும்'' என்பதாகும் ஆண்டவரது வார்த்தை அக்கினி, ஆண்டவரது விருப்பம் ஆசீர்வாதமாகும்.
- ''என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு'' (புனித யோவான் 4:34) இயேசுக்கிறிஸ்துவின் உணவு, வாழ்வு என்பது இறை தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதுவே. அது முழு உலகிற்கும் ஆசீர்வாதமானது.
- ''நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக. நம்பிக்கையை தொடர்ந்து வழிநடத்துபவரும் அதை நிறைவுசெய்பவருமான இயேசுவின் மீது கண்களை பதியவைப்போம்'' (எபிரேயர் 12:2) இறைவனை நோக்கி செல்வதற்கான மார்க்கம் இயேசுக்கிறிஸ்துவே. இயேசுக்கிறிஸ்துவிடம் எம்மைக் கொண்டு செல்வது தூயஆவியானவர். நாம் தூய திரித்துவமான இறைவனின் திருமுன்னிலையில் தோன்றி நின்றவாறு அவருக்கு எமது புகழ்ச்சியை நன்றியை நமஸ்காரத்தை செலுத்துவோம்.
- புபுது பாடல் இல 137 ''உமது வார்த்தையின் அடிமை.......''
  .

02. கடந்த வார நற்செய்தியை முன்கொண்டு அனுபவம் பகிர்தல்....

03. நாளுக்குரியநற்செய்தி

- புனித யோவான் 5:30 மற்றும் நீதிமொழிகள் 29:18 பொதுவில் வாசிக்கவும்.
- சிறு குழுக்களாக சேர்ந்து மீண்டும் இப் பகுதிகளை வாசித்து அதைப் பற்றி பகிர்ந்து கொள்ளவும்.
- பின்னர் சிறு குழுக்கள் சிலவற்றின் அனுபவத்தை பொதுவில் பகிரவும்.

04. வெளிப்பாடுகளை உரிமையாக்கிக் கொள்வோம்.

- புனித யோவான் 5:30

ஆண்டவரது வாழ்வின் நோக்கம் பார்வை இறைதந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே ''ஏனெனில் என் விருப்பத்தை நாடாமல் என்னை அனுப்பியவரின் விருப்பத்தையே நாடுகிறேன்'' நீதிமொழிகள் 29:18 ''எங்கே இறை வழிபாடு இல்லையோ, அங்கே குடிமக்கள் கட்டுக்கடங்காமல் திரிவார்கள். நீதிபோதனையின் படி நடப்பவர் நற்பேறுபெற்று மகிழ்வர்'' வாழ்வில் நோக்கம், தரிசனம் அற்ற மனிதன் தான் தோன்றியாவான். அவன் அவனுக்கு வேண்டியவற்றையே செய்வான். ஆயினும், இயேசுஆண்டவர் அவருக்குத் தேவையானவற்றை செய்யவில்லை. அவருக்கு நோக்கமொன்று இருந்தது. அந்த நோக்கம் தான் அப்பாவின்

விருப்பத்தை நிறைவேற்றுதல். அந்த நோக்கத்தினின்று விலகிவேறு எதையும் அவர் செய்யவில்லை. அவர் செய்தது, நினைத்தது, சொன்னது அனைத்துமே அப்பாவின் விருப்பத்திற்கு ஒன்றிணைந்தே இருந்தது.

- ❖ இயேசு ஆண்டவருக்கு அவ்வாறு செய்திட முடியுமான வல்லமை எங்கிருந்து எவ்வாறு கிடைத்தது: தூய ஆவியாருடன் ஒன்றிணைந்த நிரந்தர விழிப்புறுதலின் அனுபவம், நிரந்தரமும் அப்பா பிதாவின் முன்னிலையில் தோன்றிநிற்றல், ஆழமான செபவாழ்வின் அனுபவங்களினாலேயே.
- ❖ அத்தோடு அவர் பரிசுத்த வேதாகமத்தினின்று வரும் இறைவார்த்தையினின்று வெளிப்பாடாகிய இறைவிருப்பத்திற்கு உடனே விழிப்புற்றார். அந்த வார்த்தையினூடாக வரும் வெளிப்பாடுகளுக்கு (இறை விருப்பத்திற்கு) உகந்தவாறு வாழ்ந்தார்.

05. எமது பக்கம்

- ❖ ''என் பின்னே வா'' என ஆண்டவர் எம்மை அழைப்பது அவரைப் போன்று நாமும் வாழ்வதற்காகவே. அவ்விதமாக அப்பாவின் விருப்பத்தை நிறைவேற்றிடவே நாம் எவ்வளவு தூரம் ஆண்டவரை நோக்கி பார்வையை பதித்தவாறு வாழ்கிறோம். அருகிலிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவும்.
- ❖ நாம் எவ்வளவு தூரம் எமது தனிப்பட்ட வாழ்க்கையில், எமது குடும்பத்துள், எமது சங்கத்தில் இறை விருப்பத்தை கேட்டு அதற்கு ஏற்றவாறு செயல்படுகிறோம். பகிர்ந்து கொள்ளவும்.
- ❖ தூய ஆவியானவருக்கு விழிப்புறும் வாழ்க்கை, செபவாழ்க்கை, பரிசுத்த வேதாகமத்தின் இறை வார்த்தையினுள் இறை விருப்பத்தை அறிந்து கொள்வதற்கு எவ்வளவு தூரம் உதவி இருக்கிறீர்கள். பகிர்ந்து கொள்ளவும்.

06. இறுதிப் புகழ்ச்சி

- ❖ அனைத்திலும் இறை விருப்பத்தை தேடி அதனை நிறைவெற்றிட அதற்காக தூய ஆவியானவருக்கு நிரந்தரமும் விழிப்புற, தினமும் இறை வார்த்தையை உண்டிட, ஆழமான செப வாழ்வினைக் கழித்திட வேண்டிய வல்லமையைக் கேட்டு சிறு குழுக்களாக ஒருவர் ஒருவருக்காக செபிக்கவும்.
- ❖ குடும்பத்தினுள், அன்றாடம் சந்திக்கும் நபர்களில் இறை வார்த்தையை தேடல், இறை விருப்பத்தை நிறைவேற்றல் குறித்து விழிப்புறுவோம்.

  புபுது பாடல் இல 221 ''இயேசுவே ஆண்டவர்..........''